**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 358/2020 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சுகன்யா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. டேவிட்ராஜ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.04.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். 29.06.2018 ம் எனது தந்தை ஜாண் என்பவருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் நெய்யூர் மருத்துவமனையில் அனுமதித்திருந்தோம். 04.07.2018 ம் தேதி நான் ராவிளையில் உள்ள எனது வீட்டைகாலை 09.30 மணிஅளவில் நான் வந்துப்பார்த்தபோது வீட்டின் கதவு திறக்கப்பட்டிருந்தது. மேலும் பீரோவின் கதவும் திறக்கப்பட்டிருந்தது. நான் பார்த்தபோது லாங் செயின் 6 பவுன், இரண்டரை பவுனில் 5 மோதிரம், 5 பவுனில் 3 காப்பு, ஒரு ஜோடி கம்மல் - அரைபவுன் ஆகியவற்றைக் காணவில்லை.

நான் அருகிலுள்ள நபர்களிடம் இதுகுறித்துக் கூறினேன். காவல்நிலையம் சென்று புகார் மனுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். **மேற்படி தடயப்பொருட்கள் அ.சா.பொ. 1 முதல் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>குறுக்கு விசாரணை</u>** :

மருத்துவமனையில் எனது அப்பாவை எனது தம்பி தான் சிகிட்சைக்கு சேர்த்தார். மருத்துவமனையில் அப்பாவுடன் நான் தான் இருந்தேன். எனது வீட்டில் நான், எனது கணவர், மாமியார் மட்டும் தான் உண்டு. எனது கணவர் வெளிநாட்டில் இருக்கிறார். சம்பவயிடம் எனது மாமியார் வீடாகும்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.